வளன்ஆயம்
நொழ்தோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# தமிழரின் சிறு தெய்வ வழிபாடு

**ஜெ. ஜெயபிரியா,**
**இளங்கலை இலக்கியம்,**
**இ.ஜி.எஸ். பிள்ளை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகப்பட்டினம்.**
muthusaram63@gmail.com
8610330706

ஆய்வுச் சுருக்கம்

தமிழர்கள் தனது வாழ்க்கையில் முக்கிய பங்காக தெய்வ வழிபாட்டினை சிரம் மேற்கொண்டு வாழ்கின்றனர். பக்தி என்பதை விடநம்பிக்கையின் மூலம் பல தெய்வங்கள் உருவானது. அப்படி உருவான தெய்வங்கள்தான் சிறு தெய்வங்கள். இந்த சிறு தெய்வங்கள் நாட்டுப்புற மக்களிடையே அதிக அளவு வழிபடப்படுகிறது. சிறுதெய்வங்களையும் அத்தெய்வங்களின் வழிபாட்டுமுறைகளையும் பற்றி எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

கலைச்சொற்கள்

பெரிய உருவம், சூலாயுதம், கதாயுதம், பரிவார தெய்வங்கள், வேட்டை நாய்கள், பூதாகர உருவம்.

முன்னுரை

சிறு தெய்வ வழிபாடு என்பது நாட்டார் தெய்வங்களை வழிபடும் முறையாகும். இந்த தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவான இலக்கணங்களோ, வரைமுறைகளோ வகுக்கப்படவில்லை. காலம் காலமாக முன்னோர்களால் செய்யப்பட்ட சடங்குகள் வழிவழியாக நடத்தப்பட்டு தற்போதுள்ள வழிபாட்டு முறைகளாக மாற்றம் பெற்றுள்ளன.

சிறு தெய்வங்கள்

நாட்டுப்புற மக்களால் தொன்றுதொட்டு வழிபடப்பட்டு வரும் கிராம தெய்வங்களே சிறு தெய்வங்கள் ஆகும். இவை நாட்டுப்புற மக்களின் காவல் தெய்வங்களாகவும் நோய் நீக்கி நலம் பெற்று வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பவையாகவும் கருதி நம்பிக்கையின் அடிப்படையில் இத்தெய்வங்களை மக்கள் வணங்குகின்றனர். இத்தெய்வங்கள் பரந்துபட்ட தொடர்பில்லாமல் கிராமங்களையே இருப்பிடமாக கொண்டு நாட்டுப்புற மக்களின் மரபோடு நீங்காத உறவு கொண்டு விளங்குகின்றன.

சிறு தெய்வங்களின் வகை

1. வீட்டு தெய்வம்
2. குலதெய்வம்

3. இன தெய்வம்
4. ஊர் தெய்வம்
5. ஆண் தெய்வம்
6. பெண் தெய்வம்

வீட்டு தெய்வம்

தங்களுக்குள் வழிகாட்டியாய் விளங்கி வாழ்ந்து மறைந்த முன்னோர்களையோ, கன்னியாக இருந்த நிலையில் வாழ்ந்து மறைந்த பெண்களையோ, குழந்தைகளையோ தங்கள் வீட்டு தெய்வமாக வழிபடும் மரபு காணப்படுகிறது. இது பெரும்பாலும் பெண் தெய்வமாகவே இருக்கும். இதனை வீட்டு சாமி, குடும்ப தெய்வம், கன்னி தெய்வம், வாழ்வரசி என்று கூறுகின்றனர்.

குலதெய்வம்

ஒரு குறிப்பிட்ட முதாதையின் மரபில் தோன்றியதன் வழியாக ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ள குழுவே குலம் (clan) ஆகும். இரத்த உறவு உடைய பங்காளிகள்ஒரே குலத்தை சேர்ந்தவர்கள். இவர்களுக்குள் திருமண உறவு நடைபெறாது. இவ்வாறு அமையும் ஒவ்வொரு குலத்திற்கும்தனிப்பட்டக் கோயிலும் இருக்கும். இதுவே குலதெய்வம் என்றும் குலதெய்வக் கோயில் என்றும் குறிப்பிடப்படுகிறது. "குலதெய்வத்தை வணங்கினால் கோடி நன்மை உண்டாகும்; குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறக்காதே"என்ற பழமொழிகள் குலதெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

ஊர் தெய்வம்

வீட்டைக் காப்பது வீட்டு தெய்வம். குலத்தைக் காப்பது குலதெய்வம். ஒரு ஊரில் வாழும் மக்கள் அனைவரையும் காப்பது ஊர் தெய்வமாகும். ஊர் தேவதை,ஊர் காவல் தெய்வம்என்ற பெயர்களில் இவை குறிப்பிடப்படுகின்றன. மிக விமர்சையாக பெரியதிருவிழாவாக நடத்துவர்.அச்சமயங்களில் ஊர் மக்கள் தொழில் காரணமாகவோ இன்னபிற காரணங்களுக்காகவோ வெளியூரில் இருந்தால் தமது சொந்த ஊருக்கே வந்துவிடுவர். இதற்காகவே காப்பு கட்டுதல் என்ற நிகழ்வும் ஊர்ப் பொதுவில் நடைபெறும். இரவு நேரத்தில் ஊரைத்தாண்டி வெளியில் தங்குவது கூடாது போன்ற நம்பிக்கையும் இவ்விழாச் சமயங்களில் பின்பற்றப்படும் மரபு.

சிறு தெய்வங்கள் தோற்றம் பெறும் முறை

சிறு தெய்வங்கள் பெரும்பாலும் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை அடிப்படையிலேயே தோற்றம் பெறுகின்றன. சிறு தெய்வங்கள் எல்லாம் ஒரே முறையில் தோற்றம் பெறுவதில்லை. அவை பல்வேறு காரண காரிய அடிப்படையில் பல்வேறு பின்புலத்தில் தோற்றம் கொள்கின்றன.

சிறு தெய்வங்களின் தோற்ற முறைகள்

குறிப்பிட்ட ஊரில் குறிப்பிட்ட வட்டாரத்தில் பிறந்து இறந்ததன் அடிப்படையில் தோற்றம் பெறுதல்என்பது பரவலாக கூறப்படும் செய்தியாகும்.

- ☐ ஆற்றில் மிதந்து வந்த பெட்டிக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டு தோற்றம் பெற்றவை.

☐ மக்கள் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு புலம் பெயர்ந்து நிலையில் பூர்வீக தெய்வக் கோயிலில் இருந்து பிடி மண்ணாக எடுத்து வரப்பட்டு தோற்றம் பெற்றவை.

☐ வேறு திசைகளில் இருந்து வந்த ஒரு குறிப்பிட்ட ஊர் மக்களை வட்டார மக்களை பாதுகாத்ததன் வாயிலாக தோற்றம் பெற்றவை.

சிறு தெய்வ கோயில் அமைப்பு

கோயில் என்ற சொல் இறைவன் எழுந்தருளஇருக்கும் ஆலயத்தைக் குறிப்பதாகும். கோயில் என்றவுடன் வானுயர்ந்த கோபுரங்கள், பல்வேறு வண்ணத்திலான சிற்பங்கள், நீண்ட மதில் சுவர் என்றெல்லாம் கற்பனை செய்து விடக்கூடாது.சிறு தெய்வ கோயில்கள் பெரும்பாலும் மரத்தடியிலும், குளம், கண்மாய், ஏரி, ஆறுபோன்ற நீர் நிரைகளுக்கு அருகிலேயே அமைந்திருக்கும். இக்கோயில்கள் கிழக்கும் வடக்கும் பார்த்து இருத்தல் வேண்டும் என்பது மரபு.

சிறு தெய்வங்களுக்கு கோயில் எழுப்பி வழிபடும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியதாகும். பெரும்பாலும் திறந்த வெளியிலும் மரத்தின் கீழையும் தெய்வமாக கருதி வழிபட கல், சூலாயுதம், வேல், அரிவாள், விளக்கு போன்றவை இருக்கும்.இதற்கு அடுத்த நிலையில் சிலைகள் (தெய்வச் சிலைகள், குதிரை, நாய்) உருவாக்கப்பட்டு அவை திறந்த வெளியிலோ கோயிலிலுள்ளோ வைக்கப்பட்டிருக்கும்.

தெய்வங்களின் பெயர்கள்

ஆண் சிறு தெய்வங்களின் பெயர்கள் பொதுவாக அய்யா, அப்பன், அடியான், சாமி , ஈஸ்வரன் முதலிய விகுதிகளோடு இருக்கும். கருப்பையா, இருளப்பன், பனையடியான், கருப்பசாமி, முனீஸ்வரன் என ஆண் தெய்வங்களைக் கூறுகின்றனர்.

பெண் தெய்வங்களை அம்மன், நாச்சி, கிழவி முதலிய விகுதிகளோடு முத்தாலம்மன், பெரியநாச்சி, அரியக்கிளவிஎன பெண் தெய்வங்களின் பெயர்களை அமைந்திருக்கின்றனர்.

நம்பிக்கைகள்

மனிதன்தங்களுக்கு சில நோய்கள் தெய்வத்தின் சினத்தால் உண்டாவதாகவும் அந்நோய்களை நீக்குவதற்கு தெய்வத்தின் சினத்தை தணிக்க வேண்டும் என நம்புகின்றனர்.இந்த நம்பிக்கைகளின் விளைவாக தெய்வத்தின் சினத்தை தணிப்பதற்கு சில மந்திர சடங்குகள் நடத்தப்படுகின்றன. இது போன்ற நோய் உண்டாவது பற்றிய மற்ற நம்பிக்கைகளுக்குஏற்ப பல்வேறு வகையான மந்திர சடங்குகளும் நடத்தப்படுகின்றனர்.

நடத்தப்படும் சடங்குகள்

1. மாவிளக்கு எடுத்தல்
2. மந்திரித்தல்
3. திருநீறு போடுதல்
4. கண்மலர் படைத்தல்
5. நாக தேவதையை வெளிப்படுதல்

1. மாவிளக்கு எடுத்தல்

குடும்பத்தில் சிறு வயது உள்ளவர்கள் ஏதேனும் நோய்க்கு ஆட்படும் பொழுது குடும்ப குலதெய்வத்திற்கு அரிசி மாவினால் விளக்கு செய்து அதில் எண்ணெயை ஊற்றி திரி போட்டு ஏற்றிநோய் வந்த உடற்பகுதியில் வைப்பர். இப்படி செய்வதால் விரைவில் நோய் குணமடையும் என்றும் அதனைச் செய்ய முடியாதவர்கள் நோய் நீங்கிய பின் செய்யும் பரிகாரமாகவும் இச்சடங்கை நம்புகின்றனர்.

2. மந்திரித்தல்

மந்திரித்தல் என்பது கோயிலில் அம்மனுக்கு பூசையினை மேற்கொள்ளும் பூசாரி வேப்பிலை கொண்டு நோய் உள்ளவர் அல்லது பயந்தவர் முகத்தில் அடித்தால் அவரது நோயும் பயமும் நீங்கும் என்று நம்பிக்கையும் கிராமப்புறங்களில் அதிக அளவு காணப்படுகிறது.

3. திருநீறு போடுதல்

உடல்நிலை சரியில்லாதவர்கள் கை, கால் வீழ்ந்தவர்களுக்கு அவர்களது குலதெய்வ கோயிலில் இருந்து திருநீற்றினை கொண்டு வந்து உடல்நிலை சரியில்லாதவர்கள் மீது திருநீற்றினை பூசுவார்கள் இதனால் உடல்நிலை சரியாகும் என்ற நம்பிக்கை காணப்பட்டது.

4. கண்மலர் படைத்தல்

கண்ணில் ஏற்படும் நோய்களால் பார்க்கும் ஆற்றலை இழத்தல் முதலியவை தேவர் சினத்தால் விளைந்தவை என மக்கள் நம்புகின்றனர். இதனால் சில சடங்குகள் செய்கின்றனர். இதனை கண் போன்ற உருவத்தை செய்து கண்மலர் படைத்தல் எனக் கூறுகின்றனர்.

5. நாக தேவதை வழிபாடு

பாம்பு, தேள், பூரான்ஆகியவை கடிப்பதனால் உண்டாகிற உடல் நலக் கேடுகளுக்கு தெய்வத்தின் சினம் என்று மக்கள் நம்புகின்றனர். நாக தேவதையின் சினம் காரணமாக மனிதர்களை பாம்பு கடிக்கு ஆட் படுகின்றனர் என்ற நம்பிக்கை நிலவுகிறது. இதனால் விஷக்கடி என்றால் நாக தேவதையை வழிபடுகின்றனர்.

சிறு தெய்வங்கள் கனவில் வருதல்

காவல் தெய்வங்கள் என கூறினால் மாரியம்மன், திரௌபதி அம்மன், சுடலை முத்து, கருப்புசாமி, காத்தவராயன் என பல தெய்வங்கள் இருக்கின்றனர்.தெய்வங்கள் கனவில் எப்படி வருகிறது, வருவதற்கான காரணம், அப்படி வருவதன் மூலம் ஏற்படும் நன்மை தீமைகள் என அனைத்தையும் பற்றி அறிந்துகொள்ளமுடிகிறது.கனவில் சிறு தெய்வங்கள் சிவப்பு நிற உடையில் காணப்பட்டால் வாழ்க்கையில் ஏதோ மாற்றம் நடக்கப்போகிறது என்று அர்த்தம். அதைப்போல் தெய்வங்கள் மிகவும் கோபத்துடனும் சிவந்த முகத்துடனும் காணப்பட்டால் எதும் பிரச்சனை வருவதை குறிக்கிறது என்றும் புரிந்து கொள்ள முடியும்.

தாய் தெய்வ வழிபாடு

தாய் தெய்வங்கள் பல பழைய நாடுகளில் இருந்துபண்டைய காலத்தில் பல குடிகளாய் பல பெயர்களில் காணப்படுகிறது. தாய், தாய் தெய்வம், பழையோள், கொற்றவை, மலைமகள் என்ற பெயர்களில் இத்தெய்வ வழிபாடு காணப்படுகிறது.வருடத்திற்கு ஒருமுறையாவது இவ்வழிபாட்டினை மேற்கொள்ளவேண்டும் என்பதுவும் நாட்டுப்புற மரபு.

தாய் தெய்வ வழிபாட்டுப் படையல் பொருட்கள்

ஸ்ரீதேவி வழிபாடு என்பது காலமாற்றங்களுக்கு ஏற்ப மாறுதல் அடைந்து வந்தது. இன்றைய காலத்தில் சிறிய இடங்களில் உருவமாகவும், உருவம் இல்லாமலும் தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர்.பெண் தெய்வங்கள் பெரும்பாலும் ஏதேனும் ஒரு மரத்தின் அடியில் அமைந்திருக்கின்றனர். இதனை ஓர் குறியீடாகவே பார்த்து வருகின்றனர். ஒரு சில இடங்களில் மரத்தினை மட்டுமே தெய்வமாக வைத்து வணங்குகின்றனர். தாய் தெய்வங்களுக்கு பால்குடம் எடுத்தல், தீச்சட்டி எடுத்தல், பெண்கள் மாவிளக்குவைத்தல் போன்றவை மூலம் வழிபாடு நடைபெறுகிறது. தேங்காய், வளையல், பச்சைக் கரும்பு, மஞ்சள் கிழங்கு, குங்குமம் எனப் பல வகைகள் படையலாக வைத்து வழிபட்டு வருகின்றனர்.சில தெய்வங்களுக்கு இரத்த பலி மட்டும் காட்டுகின்றனர். தாய் தெய்வங்கள் கிராமத்தினரை காப்பதாக நம்புகின்றனர்.

முடிவுரை

தன்னைக் காத்துக்கொள்ள மனிதனால் உருவாக்கப்பட்ட ஒன்றுதான் தெய்வ வழிபாடு ஆகும். அதை கால சூழ்நிலையில் வளர்ந்த சிறு தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு என தெய்வங்களை வகைப்படுத்துகின்றனர். தமிழரின் சிறு தெய்வ வழிபாடு வரலாற்றின் மரபினைக் கொண்டு அமைகின்றது. சிறு தெய்வ வழிபாடு என்பது மனிதனின் நம்பிக்கையாகவே பார்க்கப்படுகின்றனர்.

பார்வை நூல்கள்

1. சி. தவமணி, சிறுதெய்வ வழிபாட்டில் பெண் தெய்வம்.
2. கு. கண்ணன், நாட்டுபுறத் தெய்வங்களும் மக்கள் நம்பிக்கைகளும்.
3. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு.
4. இரா. சுரேந்திரன், நாட்டுப்புற இலக்கியம் நலம் தரும் விளக்கம்.
5. க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்.